

அந்தோனிக்குட்டி அண்ணாவியார்

அவர்கள் அருளிச் செய்த

# பேரின்பக் காதல்

பதிப்பாசிரியர் ,

அருள்திரு. ஞா. பிலேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தோனிக்குட்டி அண்ணாவியார்

அவர்கள் அருளிச் செய்த

Rev. Prof. G. Pilendran
Professor Emeritus
St. Martin's Seminary
Jaffna, Sri Lanka

# பேரின்பக் காதல்

பதிப்பாசிரியர்,

அருள்திரு ஞா. பிலேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பேரின்பக் காதல்' என்னும் இந்த அம்மானை உலகைப் படைத்துக் காப்பாற்றும் நித்தியரும், சத்தியரும் தேவ தூதரும் போற்றும் தெய்வீகராகிய யேசுநாதசுவாமி மேற் பாடப்பட்டது.

அந்தோனிக்குட்டி அண்ணாவியார் அவர்கள் தேவ னிடமும், தேவதாயாரிடமும் **வரம்** வேண்டி இதைப்பாடி யுள்ளார்.

மூவிராசாக்காளால் வணங்கப் பெற்றவர், ஸ்நாபக யுவானியாரால் திருமுழுக்குப் பெற்றவர், கானாவூரில் தண்ணீரை இரசமாக்கியவர். கொடிய பசாசை வெற்றி கொண்ட சிலுவைக் கொடிஉடையவர், செத்தவர்களைச் சீவிக்கவைப்பவர். தேவதாயின் திருமகன் என்று புலவர் தமது **காதலனாகிய** இறைமகனைப் புகழுகிறார்.

நான்பாவி. அறிவில்லாதவன் பொருளாசை உள்ளவன் ஒழுக்கமில்லாதவன். பெண்ணாசை பிடித்தவன் என்று **தாழ்ச்சி** மனப்பான்மையுடன் தேவனை வணங்குகிறார்.

ஆணிகள் தைத்த கைகளையும் முள் முடியையும், கற் றூணிலே அடிபட்ட காயங்களையும். பாரச்சிலுவை சுமந்த பரிதாப கோலத்தையும் நினைந்துக் கண்ணீர் சொரிந்து **விசுவாசத்தில்** வேரூன்றி மனஸ்தாபப்படுகிறார்.

என்னைப் படைத்தவரே எனக்காக இவ்வளவு பாடு களைப்பட்டீரே, என்பாவம் போக்கச் சிலுவை மரணத்தை ஏற்றீரே. இவையெல்லாம் எண்ணாமல் பாவிநான்தானே உம்மைக் காட்டிக் கொடுத்தேன் கற்றூணிலே கட்டி. அடித்தேன், சிலுவையில் அறைந்தேன் என்று மனம் உருகிக் கண்ணீர் வடிக்கிறார். **மனஸ்தாபம்** கொள்கிறார்.

மரணம் என்றுவருமோ என்று நான் அறியமாட்டேன். வாழும்போது புண்ணியம் செய்யாமல், வாலிபத்தில் நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி தேடாமல் இறந்த பிற்பாடு சிறந்த பாக்கியம் பெற மாட்டேனே நாளைக்கு நாளைக்கு என்று நாளைக் கடத்துகின்றேன் தாயும் தந்தையும் மனைவியும் அழுது புலம்பும் மரணவேளையில் என்னால் நன்மைகள் செய்ய முடியாதே நஞ்சுவாழ்வைத் தேன்என்று நம்பி வாழ்ந்தேனே எனக் கலங்குகிறார்.

இந்த உலகவாழ்வு நீர்க்குமிழி போன்றது நிலையற்றது மனமே பொய்யான உலகத்தில் ஆசைவையதோ என்று திடமான **பிரதிக்கினை** செய்கிறார்.

**பக்தி** உணர்ச்சி அவருள்ளத்தில் பொங்கிவருகிறது

தேவசுதன் பட்டபாடுகளின் துயரத்தைப் பொறுக்க முடியவில்லையே அவர்பட்ட காயங்கள் என் மனத்திலே காயங்களாகத் தெரிகின்றனவே. முள்முடியின் முட்கள் என் இருதயத்தைத் தைக்கின்றன இருப்பாணிகளும் ஈட்டியின் முனையும் என் மார்பைப் பிளக்கின்றன

உலகத்தின் பாவங்களைப் போக்கியவரே என்னைப் பசாசிடம் இருந்து பாதுகாத்தருளும் அன்போடு என்னை அரவணைத்துக் கரங்களால் தாங்கும். உலகம் உம்மைப் போற்றித்துதிக்க நான் பொல்லாதவனாகப் போக விடாதேயும். எம்மை மீட்க வந்தவரே என்னை நரக இருளிற் போகாதபடி காப்பாற்றும். தேவனே பாவிகளுக்காக நீர் சிந்திய இரத்தத்தில் எனக்கும் பங்கு தந்தருளும். வலது புறக் கள்வன் முகத்தைப் பார்த்த கருணைக்கண்களை என் மேல் திருப்பியருளும். தாகத்தால் வருந்திய தந்தையே. உமது பாசத்தை என் மீது செலுத்தும் தேவதாயாரை என் தாயாகத்தந்த கிருபையோடு என்னைப் பாரும். பூமிக்குப் பொழிந்த இரத்தவெள்ளத்தில் ஒருதுளியை என் உள்ளத்திலே தெளித்தருளும் பாவி என்னைக் கைவிடாதேயும் கர்த்தாவே என்று இறையன்பை இரந்து உருகினார்.

**நம்பிக்கை** ஒளி அவருள்ளத்திற் பிரகாசித்தது உலகின் அற்பசுகங்களை நான் மறந்தால் மோட்சராச்சியம் சேர்வேன், அகங்காரம் போக்கி தவம், தருமம் செய்தால் பரலோக பேரின்பம்அடைவேன். மோகபாவத்தைவெறுத்தால் தேவலோகம் போய்ச் சேர்வேன். பேயுடலை வெற்றிகொண்டால், இன்பதுன்பங்களில் பற்றுக்களை விட்டால் இறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யரசின் நிறைவைக் காண்பேன். பாவத்தை வெறுத்து உலக பாக்கியங்களைக் கைவிட்டுப் புண்ணியம் செய்தால் மோட்ச வாசிகளோடு முத்திநகரத்தில் வீற்றிருப்பேன். பத்தி, விசுவாசம், நம்பிக்கையோடு தேவனுக்கு ஏற்ற பிள்ளையாக வாழ்ந்தால் திருமகனாரின் பரிசுத்த பாதங்களைக் கண்டு களிப்பேன் என்று தளராத நம்பிக்கைச் சுடர்பெற்றார்.

கர்த்தரைப் **புகழ்ந்து** பாடினார். ஞானபரஞ் சுடரை நாள்தோறும் நமஸ்கரிப்போம். அநுதினமும் வாயார வாழ்த்துவோம் பூமிக்கு ஞானவழிகாட்டிய தேவமைந்தனைப் போற்றுவோம் சத்திய சொரூபனை நித்தமும் துதிப்போம். எம்மைத்தேடி ஆவலோடு ஓடிவந்து அரவணைத்த தேவாதிதேவனை வந்தனை செய்வோம் என் உயிருக்காகத் தன் உயிரைத்தந்து உடலாலும், இரத்தத்தாலும் தியாக பலியாகி எம்மை இரட்சித்த தெய்வீகனைப் பணிவோம் என்று இறைபுகழ் பாடினார்.

மனுக்குலத்தின் இரட்சணியத்துக்காகத் தம் மகனைக் கையளித்த திருத்தாயைப் பேரின்ப **இராக்கினியையும் புகழ்ந்து** போற்றினார். உத்தமியே ஞானச்சித்திரமே, புனித ஓவியமே, வானோரின் திரவியமே, மங்கையர்க்கு அரசியே, புண்ணியத்தின் ஆபரணமே தருமத்தின்வடிவமே நம்பினோரின் அடைக்கலமே வானநந்தவனமே, அருளின் செந்தேனே விண்ணும், மண்ணும் துதிக்கும் தாயே. துன்பத்துணையே, வறுமையிற் செல்வமே, பாவிகளின் தஞ்சமே என்று வாய் மலர்ந்து மனம்மகிழ்ந்து வந்தனை செய்து ஆனந்தமடைந்தார்.

இறுதியாக **திருச்சபை** வாழ்க அழியாத சத்தியம் வாழ்க. ஆயர்கள், குருக்கள், ஞானிகள் தபசிகள், கன்னியர்கள், துறவிகள், திருமறைப் பொதுநிலையினர் வாழ்க, வாழ்க என்று வாழ்த்தினார்

பஞ்சம் படை, கொள்ளைநோய் பரவாமல்
நெஞ்சம் மகிழ்ந்து நீடுழிகாலம் வாழ்வோம்
என்று பாடி அமைதிபெறுகிறார்

**ஆசிரியர் ம. விக்ரர்**
**" யாழ் - ஜெயம் "**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

16ஆம் நூற்றாண்டின் முற்கூற்றில் இடம் பெற்ற போர்த்துக்கேயரின் இலங்கை வருகைக்குப் பின்பே, ஈழத்துக் கத்தோலிக்க இலக்கியப்பாரம் பரியம் தோற்றம் பெற்றது. கத்தோலிக்க மறையைப் பரப்புவதையே முதல் நோக்காகவும் முழு நோக்காகவும் கொண்டு இக்குறிக்கோளை அடைவதற்கு மிகப்பொருத்தமான ஊடகமாகக் கருதியே கத்தோலிக்க இலக்கியங்கள் ஆக்கம் பெற்றன.

இலங்கைத் திருச்சபையின் தமிழ்க் கத்தோலிக்க இலக்கிய வரலாற்றை நோக்குமிடத்து போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் தோன்றிய கத்தோலிக்க இலக்கியங்களுட் பெரும் பகுதி நாட்டார் இலக்கியங்களே. இவ்வாறான நாட்டார் இலக்கியங்கள் மக்களின் உவப்புடன் கூடிய வரவேற்பைப் பெறுவதற்கு, இவை தோற்றம் பெற்ற காலத்துச் சமய, சமூக, கலாசார, கல்விச் சூழல்களும் காரணிகளாக அமைந்தன.

இக்காலத்தில் மலர்ச்சி பெற்ற கத்தோலிக்க நாட்டார் இலக்கியங்களுள் அம்மானை, நாட்டுக்கூத்து ஞானப் பள்ளு, ஒப்பாரி, வியாகுலப்பிரசங்கம் என்பன குறிப்பிடத்தக்கவை. இத்தகைய நாட்டார் இலக்கியங்களை ஆக்கியவர்கள், ஏற்கனவே வழக்கிலுள்ள நாட்டார் இலக்கிய வடிவங்களைத்தழுவிக் கிறிஸ்தவக் கொள்கைகளையும், அறநெறிப் போதனைகளையும், விவிலியச் சம்பவங்களையும், படிப்பினைகளையும் திருச்சபை வரலாறுகளையும், புனிதர்கள் வாழ்க்கைச் சம்பவங்களையும் கருப்பொருள்களாகக் கொண்டு இலக்கியங்களைப் படைத்துள்ளனர்.

புனையப்பெற்ற எல்லா இலக்கியங்களும், இன்றுவரை முழுமையாக நிலைக்கவில்லை. சில இலக்கியங்களின் சில பகுதிகள் மட்டுமே நிலை பெற்றன. சில இலக்கியங்கள் முற்றாக மறைவுற்றன. இன்று எம்மிடமுள்ள நாட்டார் இலக்கியங்களைப் பேணிப் பாதுகாத்து எதிர்கால சமூகத்திற்கு அளிப்பது எமது கடமையாகும். இக்கடமையின் ஒரு சிறு துளி முயற்சியாகவே அந்தோனிக்குட்டி அண்ணாவியார் ஆக்கிய **''பேரின்பக் காதல்''** என்னும் இச்சிறிய நாட்டார் இலக்கியம் மறுபதிப்புச் செய்யப்படுகின்றது. வாசகர் நலன் கருதி, இவ்விலக்கியக் கருவூலம் முழுவதையும் - யாழ். ஜெயம் - ஓய்வுபெற்ற ஆசிரியர் ம. விக்ரர் அவர்கள் தமக்கேயுரிய தனித்துவமான முறையில் இலகு நடையில் தெளிவாக முன்னுரையிற் கூறியுள்ளார். இப்பதிப்பிற்கான பிரதிகளை அச்சுப் பிழைதிருத்தம் செய்ததும் அவர்களே. ஆசிரியர் அவர்களுக்கு எனது நன்றிகள்.

இத்தகு புனரமைப்பு முயற்சிகளுக்குத் தங்கள் அனைவரதும், ஆதரவையும் உதவியையும் வேண்டுகின்றேன்.

பதிப்பாசிரியர்

**25-2-1998**

**அருள்திரு. ஞா. பிலேந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாதிநம

யேசுநாதசுவாமீபேரில்

# பேரின்பக்காதல்

## காப்பு

### விருத்தம்

கொற்றமா மகுடஞ் சூடுங் கோமகன் கோத்ரக் கன்னி
பெற்றபா லகனா ருக்கோர் பேரின்பக் காதல் பாடக்
கற்றவா கமத்தைக் கல்லாக் கருங்கடன் மீனுக் கோதச்
சுற்றுளோர் வியக்குஞ் சந்தந் தோனிதா டுணைக்கொள் வாமரோ

### காதல்

கார்கொண்டநீலக் கலோலக்கடலுடுத்த
பார்கொண்டயாவும் படைத்தழித்துக்காத்தபிரான்
ஆதியந்தமில்லா தனாதியா யானந்தச்
சோதிவடிவாகித் தோன்றுஞ்சுயசொரூபன்
மட்டில்லாநன்மை வடிவாய்மனோவாக்குக்
கெட்டில்லான்றானா யிருக்கின்றவேகாந்தன்
மாயாசுகபோக வஞ்சமனக்கூஞ்சமிதைத்
தோயாதருள் சிறக்குந் தூக்குந்துணைத்தாளன்
எந்தைசரீரமில்லா னேகதிரீத்துவமாம்
தந்தைசருவ தயாளசருவேசன்
நித்தியனின்னாம னிமலனிராதாரன்
சத்தியசுரூபன் சகலவுபகாரன்
வேடத்தாற்றற்ப்பணத்தால் வெண்ணிற்றாலெக்கியத்தால்
றேடத்தான்கிட்டாத தேவதரிசனத்தான்
ஆறெழுத்தாயெட்டெழுத்தா யைந்தெழுத்தாய் மூன்றெழு(த்தாய்
வேறெழுத்தாயோதும் விதிக்குள்ளடங்காதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரின்பக் காதல்

ஓங்காரரீங்கார வுள்ளெழுத்தோடுட்கலந்து
நீங்காச்சகள நிகழ்த்துமனதில்லா தான்
சாற்றும்விலாசசபைச் சம்மனசோர் தாம்பரவிப்
போற்றுந்தனிமுதலாய்ப் பூதலமெல்லாம்புரப்போன்
அஞ்ஞானமானபெரு மந்தகாரந்துரக்கு
மெய்ஞ்ஞானச்சோதி விளக்காய் விளங்குபிரான்
பாவப்பழம்பகையின் பற்றறுக்கப்பார்மனுவைத்
தேவத்துவத்தோடு சேகரித்ததெய்வீகன்
பாரின்பத்துன்பமெனும் பற்றில்லாக்கர்த்தனுக்குப்
பேரின்பக்காதலொன்று பேருலகில்யான்பாட

## தேவவரம்

ஞானநிறைநன்மதியு நம்பினவர்க்காயிருந்
தானமளித்திலங்குஞ் சாந்தவனேமுன்னடவாய்
ஆயேநிலவெறிக்கு மம்புலிமேல்வைத்தபதத்
தாயேயெனக்குத் தமிழ்வாக்குத்தந்தருள்வாய்
நன்னாவழியாமெய்ஞ் ஞானியேநானிலத்தி
லென்னாவிலேவந் திருந்தெனக்குவாக்கருளே
ஆர்க்குமளவுபடா வற்புதனுக்கிப்புவிமேற்
சேர்க்கும்பனுவவியாளி செப்பத்துணிந்ததெல்லாம்
முன்னமொருமாதவற்கு முந்நீர்வாயோர்சிறுவன்
சொன்னமொழிதானெனக்குச் சொல்லத்தகவாமே
பாவிருக்கவேதப் பரிவிருக்கப்பாடவொரு
நாவிருக்கவேவிழலாய் நானிருக்கலாகாதே
என்றேயடியே னியப்புகிறபுன்றமிழை
நன்றேயெனமதிப்பார் நன்னாவலர்தாமே

## காதலன் புகழ்ச்சி

மண்ணோர்க்கதிபதியா மாவேந்தர்மூவரொடு
விண்ணோர்பணிந்துதொழும் வெல்லைமகமே நவினான்
ஆனவருளப்பர்திரு வங்கையினாலேஞானஸ்
நானமதுபெற்றிடுயோர் தானென்னுந்தண்ணதியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரின்பக் காதல்

அந்தமணப்பந்தலிலே யாறுகுடந்தண்ணீரைச்
சுந்தமதுவாக்குங் கலிலேயநன்னாடன்
தேயாதபேரின்பச் செல்வமொடுமன்னர்குலத்
தாயார்வளர்க்குந் தழைக்குநசரைநகரான்
உன்னுஞ்செருசலையி லொட்டோலகராக
மன்னிவருநீச வாகனமாம்வ ரணத்தான்
ஆகத்திற்றன்றலைவைத் தன்றுதுயின்றோன்காண
மேகத்திற்றோன்றுமொரு வெள்ளைவயப்பரியான
காண்டோருங்காந்துமழற் கண்ணலகையச்சமுற்றுக்
கூண்டோடும்வெற்றிக் குருசலங்காரக்கொடியோன்
ஆவிக்குநன்குபெற வங்கமகிழ்ந்தன்புடையோர்
சேவிக்குஞானத் தியானசெபமாலையினான்
செத்தவர்களெல்லோருஞ் சீவித்தெழுகவெனச்
சத்தமெழச்சம்மனசோர் சாற்றுந்தொனிமுரசான்
பாருந்தீக்காயப் பரம்பும்பகிரண்டத்
தாருந்தலைவணங்கி யாசரிக்குமாணையினான்
ஞானாசுரன்கருணை நாதன்நரரூபன்
கோனான்தவீது குலராசகன்னிமகன்
மாகப்படிபுரக்கு மானிடர்க்குமோட்சமரு
ளேககனியேசுநச ரென்னுந்திருநாமன்
எங்கடவுளெங்கோ னெனைப்படைத்ததெய்வீக
னங்கொருநாட்பொற்சிலுவை யாசனத்திலேயிருக்கும்

## தாழ்ச்சி

நாளானநாளையிலே நானிலத்திலேயலகைக்
காளானபாவி யறிவுக்கறிவீனன்
பொய்யுலகவாழ்வுமனு போகசுகபாக்கியத்தை
மெய்யெனவேநம்பி விரும்பும்விழல்வீணன்
தேடுந்திரவியத்திற் செல்வத்திற்சிந்தைவைத்து
வாடுங்கருத்து மயங்குமதியீனன்
நல்லோரறிவுரைக்க நன்கெனக்கொண்டங்கவர்தஞ்
சொல்லாலொழுகாத துராசார துர்க்குணத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரின்பக் காதல்

ஆணவத்தால்நானென் றகம்பிரமமிஞ்சியகம்
பேணுந்திறமறியாப் பித்தர்தமிற்பேதை
மாவம்பன்வம்புரைக்க மற்றோரெதிருரைக்கக்
கோவம்பொறாமற் கொதிக்குங்குணவீணன்
உய்யுமொருசந்தி யொறுத்துண்ணாதூண்வயிறு
தெய்வமெனவூட்டுந் தினபோசனப்பிரியன்
வேய்பிற்றவத்தையற வேண்டாமெனவெறுத்துச்
சோம்பிச்சரீர சுகந்தேடுந்துர்ச்சாரி
நாட்டம்பெரிதுகுல நாரியார்மாமயற்கொள்
கூட்டங்களோடுறவு கொண்டகுலாசாரன்
அன்னியர்தங்கற்புடையோ ராயிழையாரென்றுரைக்குங்
கன்னியரையேவிரும்புங் காமாதுராசாரன்
நல்லோர்குழாங்கூடி நாதனடிதெண்டனிடச்
செல்லுந்தினகரமாந் தேவாலயந்தனிலே

## விசுவாசம்

சென்றேன்பரஞ்சுடரைத் தெண்டனிட்டேன்கைகுவித்து
நின்றேயெமையாளு நித்தனெனுங்கர்த்தாவின்
ஆணிதைத்தசெங்கரமு மம்போருகப்பதமும்
பூணுமுடிமுள்ளாற் புனைந்ததிருத்தலையும்
துன்னுமபெரும்பாவி சோடிட்டகையதனால்
கன்னத்தடிக்கக் கலங்கிச்சிவந்தகண்ணும்
பித்தக்கலந்த பிளிர்த்தமதுவிரசம்
வைத்துச்சுவைபார்த்த வன்னமணிவாயும்
மாறியெதிரடர்ந்து மானமற்றவன்பாவி
காறியுமிழ்நீர்க் கறையடர்ந்தமென்முகமும்
கற்றூணிற்சேர்த்திறுகக் கட்டியடிபட்டவடு
வுற்றேயொழுகு முதிரக்கறையுடலும்
பாங்கினுடல்கூனவிரு பட்டம்பதிந்துறுதத்
தாங்கிச்சிலுவைதனைத் தான்சுமந்தபொற்புயமும்
கண்டேன்கரைந்துமனக் கல்லிளகிக்கண்ணருவி
விண்டேனொழுக வினையேனுளமெலிந்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரின்பக் காதல்

### மனஸ்தாபம்

என்னைப்படைத்தவரே யேகபரஞ்சோதி
நின்னைத்தரையிலிந்த நிட்டூரஞ்செய்தவரார்
செய்யாதபாவமெல்லாஞ் செய்தவடியேனிருக்க
வையாநீரிந்த வருங்கொலைக்குள்ளாவானேன்
வேண்டியெனைப்பேய்க்கடிமை மீளாச்சிறைமீட்க
வாண்டவரேநீரிங் கருங்கொலைக்குள்ளாவானேன்
விண்ணிலரிய வெகுமானநானடைய
மண்ணிலுமக்கிந்தவவ மானம்வருவானேன்
பற்றாணவமதியோன் பாவவினைக்கட்டவிழ்க்கக்
கற்றூணதிலேநீர் கட்டுண்டுநிற்பானேன்
பாவியடியேன்சுமக்கும் பாவச்சுமையிறக்கத்
தேவரீரிந்தச் சிலுவைசுமப்பானேன்
பண்ணுகின்றபாவப் பகையேனுயிர்பிழைக்க
மண்ணுலகினீர்தான் மரணமடைவானேன்
ஆனாலும்பாவியென்னை யாளவென்றேயையாநீர்
தானேமனம்பொருந்திச் சம்மதித்துவிட்டீரே

### மனஸ்தாப முக்கியம்

இத்தநன்றியெல்லா மியானறியாதும்முடைய
சிந்தைக்கருவருக்குந் தீவினையைச்செய்தேனே
என்னன்பேகர்த்தாவே யெங்கோவேயும்மைமுழுக்
கன்னெஞ்சர்யூதர்கையிற் காட்டிக்கொடுத்தேனே
கன்னத்தடித்தேனே கற்றூணிற்சேர்த்தேனே
சென்னிதனின்முண்முடியைத் தெற்றியிடச்செய்தேனே
நிந்தைபலசொன்னேனே நீண்டசிலுவையில்வைத்
தந்தமுறுங்கைகாலி லாணியறைந்தேனே
எல்லாமடியே னிருநிலத்தில்யான்புரிந்த
பொல்லாதனவே புரிகின்றதித்தனையும்
ஆளத்தயைபுரிந்த வன்பையறியாதுபவ
நாளுக்குநாட்புரிந்தா னானுமக்குநல்லவனோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரின்பக் காதல்

எல்லாத்துயருநினைந் தென்மனதுதானுருகாக்
கல்லாயிருந்தாற் கரையேறப்போறேனோ
நன்முகத்தைப்பார்க்கவுள நாணியுறக்கவிழ்ந்தா
லென்முகத்தைக்கண்டா லிரக்கமுமக்குண்டாமோ
சிந்தையுடனீரெமக்காய்ச் செத்ததிருச்சாவுகண்டா
லிந்தவுலகினிலே யான்சுகிக்கநீதியுண்டோ
நாதன்மனமகிழ்ந்து நாடியவரடைந்த
வேதனையினின்பம் வெறுத்திகழஞாயமுண்டோ
நிர்ப்பந்தத்தோடெமக்காய் நீர்சிலுவைமீதிருக்க
வற்பன்றனக்குலக வாசைவரமாட்டாதே
பாவிமனத்தச்சாகப் பாடுகளெல்லாம்பதிந்தாற்
பூவுலகிலின்பம் புணரப்பொருந்தாதே
தெய்வீகச்சோதி திருச்சாவை யானினைந்தா
லையோவெனக்காசை யாண்மைவரமாட்டாதே
மாசில்லான்பட்டவவ மானத்தைச்சிந்தைசெய்தா
லாசையுலகிலெனக் ககங்காரம்வாராதே
பாவிகளுக்காகவவர் பட்டதிநப்பாடுகண்டாற்
சீவனளவும்பவத்தைச் செய்யமனஞ்செல்லாதே
கத்தன் பொறுத்தபிழை கண்டாலருந்துயர
மெத்தனைவந்தாலுமதற் கீடாகத்தோற்றாதே

## மனஸ்தாப யோசனை

இன்றைக்கோநாளைக்கோ வெப்போதோவிப்போதோ
வென்றைக்கோசா வென்றிலக்கமறியேனே
ஆங்காலம்புண்ணியத்தை யாசையுற்றுச்செய்யாமல்
சாங்காலஞ்செய்யவொரு சாமார்த்தியமுளதோ
நன்றாயிருக்கையிலே நன்மைசெய்யமாட்டாமல்
நின்றார்கடந்தார் நிலைநிற்பாரெவரோ
வாலிபத்தினல்ல வழிநடவாதாருயிர்போய்
காலம்பரஞானக் காரியத்தைக்காண்பாரோ
பாரப்பிணிமருந்தும் பத்தியமுங்கொள்ளுகையி
லாருக்கியல்பா மருந்தவசுபண்ணுதற்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரின்பக் காதல்

தந்தையழப்பிள்ளையழத் தாயழப்பெண்டிரழ
வந்தச்சமயத் தறர்புரிவதற்காமோ
நாளைக்குநாளைக்கென்றே நசையடர்ந்துகொண்டபின்பு
மாளுவதையெண்ணி மயக்கமுறக்காலமுண்டோ
ஈதெல்லாமாராய்த் திருந்தாலுமென்மனதிற்
றீதெல்லாஞ்செந்தேனாய்த் திக்திக்குமென்றுழன்றேன்

## பிரதிக்கினை

வேண்டாமுலகவெகு மானமதையின்னதெனக்
காண்டாயினிமேற் கருத்தையதில்வையாதே
இவ்வுலகவாழ்வழிந்து மின்பமெல்லாம்நீர்க்குமிழி
யவ்வளவேயாகுமென ஆசையதில் வையாதே
இனிமேலும்யானுமுமக் கேற்பநடப்பேனடியே
னினிமேலுலகபவத் தின்பசுகம்வேண்டேனே
இந்தவகைசொல்லி யிரந்தழுதுகொண்டிறைவ
னந்தமறுங்கோயி லமைந்தசனங்களொடு

## பக்தி

மீண்டேயெமைப்படைத்த வேதபரன்பாடுகளாற்
பூண்டதுயரம் பொறுக்கமுடியாதே
ஆயபுவிமீதிலெம தாண்டவனார்பட்டதிருக்
காயமெல்லாமிங்கென் கருத்திற்றழும்பாமே
துட்டன்படிபுரக்குந் தூயோன்றிருத்தலையி
லிட்டமுனைமுள்ளென் னிருதயத்திற்றைத்திடுமே
காணரியகர்த்தன் கரங்காறுளைத்தவிருப்
பாணிமுனையென்ற னகத்தைத்துளைத்திடுமே
தேட்டமுறவெங்கோன் றிருவிலாவைத்திறந்த
வீட்டிமுனைமுள்ளென் னிருதயத்திற்றைத்திடுமே
அங்கெனதுகர்த்த னனுபவித்ததுன்பமெல்லா
மிங்கென்னுளத்தி லிருந்தேயுருக்கிடுமே
பாவித்தேயும்முடைய பாட்டிலொருபங்கெனக்குத்
தாவித்தால்மீண்டுந் தரக்கூடாதென்பீரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரின்பக் காதல்

பேய்க்கடிமையானவென்னைப் பேருலகில்மீண்டெமக்கா
ளாக்கியின்னு மவ்வலகைக் காளாய்க்கொடுப்பீரோ
நீரெமக்காய்ப்பட்டபல நிந்தைகளுக்கையாவிப்
பாருலகிலென்னுடைய பாதகமோரீடாமோ

தொல்லுலகோர்செய்தகன்மத் தோடமனைத்துஞ்சகிக்கு
மெல்லையில்லா நும்பொறைக்கிங் கென்குற்றமாபெரிதோ
ஆதரவோடென்னை யரவணைக்கக்கைவிரித்த
பேதேயென்பாவம் பொறுக்கவரிதென்பீரோ

எல்லாருநாளுமுமக் கேவல்செய்யநானொருவன்
பொல்லாதவனாய்ப் போகப்பொருந்துமதோ
வாழுலகில்நீரெமக்காய் வந்ததுமெய்யாதலினால்
பாழ்நரகில்யான்போகப் பார்த்திருக்கமாட்டீரே

சாரவரும்பாவியென்னைத் தானேநீர்தள்ளுதற்குக்
காரிரும்பினாணிதைத்த கையிரண்டுங்கூடாதே
செய்யசிலுவைதனிற் செங்கால்கரத்தாணி
யெய்யவறைந்துவைத்தா லென்னைவிட்டெங்கேபோவீர்

தேவரீர்சிந்துந் திருவிரத்தமத்தனையும்
பாவிகளுக்கன்றோவென் பங்குவிடுவேனோ
ஆனாலுமென்முகம்பார்த் தாண்டவனேயாளுமென
நானாரெனவுரைக்க நாக்குண்டோநாயகமே

என்பவத்தைப்பொல்லாப்பை யிப்புவியிற்பாராம
லன்புடனீர்பட்டதுய ரத்தையுமேபாரும்
உம்மைச்சிலுவையில்வைத் தோர்க்காயிரந்ததிருச்
செம்மைக்கிருபைத் திருவுளமென்மேற்செலுத்தும்

உள்ளமுறவையா வுமதுவலப் பாலிருந்த
கள்ளன்முகம்பார்த்தகடைக் கண்கொண்டெனைப்பாரும்
பாவியென்மேலாசைகொண்ட பாசத்தீமிஞ்சியதாற்
றாவிநீர்தாகமென்ற தாதைமனமேசெலுத்தும்

தேவபிணைநீருக்கத் தேவகன்னியென்னுடைய
வாவிபிணையாக்குவித்த வன்போடெனைப்பாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரின்பக் காதல்

பாரேதரைநனையப் பாயுந்திருரத்தக்
தோரேதுளியென் னுள்ளத்திற்றெளித்தருளும்
கர்த்தாவேபாவியென்னைக் கைவிடாதேகருணை
வைத்தேயெனைநீர் வழியடிமையாயாளும்

## நம்பிக்கை

அற்பசுகத்தை யறமறந்தாலெப்போதும்
துப்புரவாமோட்ச சுகக்கிரகஞ்சேர்வேனே
ஆய்ந்தவறிவோ டகம்பிரமம்விட்டகன்றால்
வாய்ந்தபரலோக மாட்சிபெறுவேனே
தன்மந்தவசுமொரு சந்திதவறாதிருந்தா
லென்னுயிரைவாணி விழைப்பாறவைப்பேனே
மோகக்கலகவிழி மொய்குழலாராசையற்றால்
மாகசுகபாக்கியத்தில் மாறாதிருப்பேனே
என்றாற்பலகா லிருநிலத்தைப்பேயுடலை
வென்றாற்பரலோக வெற்றிபெறுவேனே
பாரின்பதுன்பமெனும் பற்றகன்றாற்பத்தர்தொழும்
பேரின்பவீடடைந்து பேறுபெற்றுவாழ்வேனே
புத்தியந்தகாரம்விட்டுப் புண்ணியத்திலேநடந்தால்
முத்தர்சபைதிரண்ட மோட்சத்திருப்பேனே
துன்மனசும்பாவத் துணிவுமறவெறுத்தால்
சம்மனசினோடுநவ சங்கத்திருப்பேனே
பாவவுலகத்திலுள்ள பாக்கியத்தைக்கைநெகிழ்ந்தாற்
றேவபரன்சந்நிதியிற் செல்வம்பெறுவேனே
அத்தன்றனக்கேற்க வம்புவியிலேநடந்தால்
கர்த்தன்றிருப்பாதங் கண்டுகளிகூர்வேனே
பத்திவிசுவாசநிலை பண்புறுநம்பிக்கையுட
னித்தியமும்வீற்றிருந்தா னேசநிலைதப்பாமல்
நித்தியத்தினுண்ணறிவை நெஞ்சமுத்தியென்மனதைச்
சுத்திகரஞ்செய்ததினாற் றொல்புவியிலேசுகமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரின்பக் காதல்

### கர்த்தர் புகழ்ச்சி

வேதனைவேதாந்த விமலனைமெய்ஞ்ஞான
நாதனைவாழ்த்தி நமஸ்கரித்துநாள்விடுவோம்
காரணனைச்சோதிக் கடவுளெனுங்கர்த்தாவை
யாரணனைவாழ்த்தி யனவரதமுந்தொழுவோம்
மண்ணவர்க்குஞான வழிகாட்டவந்தருளும்
விண்ணவனைவாழ்த்தி விருப்பமுறவேயிருப்போம்
சத்தியத்தைப்போதித்த சற்குருவைக்கர்த்தாவை
நித்தியமும்போற்றியறிந்து நீணிலத்திலேயிருப்போம்
தன்னிலையைத்தப்பித் தவித்துமெனைத்தேடிவந்தே
யுன்னியரவணைத்த வும்பர்கோனைத்தொழுவோம்
என்னுயிர்க்காய்த்தன்னுயிரை யேகபரன்கையளித்த
மன்னுயிரின்ரட்சகனை வாழ்த்திநமஸ்கரிப்போம்
ஆத்துமசரீரமதை யன்புதிவ்யபோசனமாய்ச்
சேர்த்துநமக்களித்த தேவபலியைத்தொழுவோம்

### தேவமாதாவின் புகழ்ச்சி

இப்படியேயென்னை இரட்சித்தவாண்டவனை
எப்போதும்போற்றி யிறைஞ்சுவதுமல்லாமல்
மற்றுநிகரொவ்வா மறைப்பொருளைவையகத்திற்
பெற்றதிருத்தாயான பேரின்பராக்கினியை
உத்தமியைப்பேரின்ப வோவியத்தைமெய்ஞ்ஞானச்
சித்திரத்தைமேலோகர் தேடுந்திரவியத்தை
மாதர்க்கரசை மனுக்குலத்தோர்பாக்கியத்தை
சோதிக்கிரணநிறை சொர்ணமயவாலயத்தை
மேலோகர்வாழ்வை விரத்தர்சிரோன்மணியைப்
பூலோகமாதவத்தோர் புண்ணியத்தின்பூஷணத்தை
நன்மைச்சலநிதியை நம்பினவர்க்காதரவை
தன்மக்கொழுந்து தழைத்துவளர்தண்டலையை
ஞானமணநாறுமலர் நந்தாவனத்திரசு
பானப்பசுமை பரிமளிக்குஞ்செந்தேனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரின்பக் காதல்

வேதாகமத்தோரும் விண்ணோருங்கொண்டாடும்
மாதாவையெம்மை வளர்த்தருளுந்தாயாரை
ஒன்றானகர்த்த னொருவனுடைசந்நிதியில்
மன்றாடியெங்கள் மயக்கந்தவிர்ப்பவளைத்
தாரித்திரத்தாற் சலிப்பாலரும்பிணியாற்
பாரிற்றுயர்வாரைப் பட்சீகரிப்பவளை
எத்துணையுமற்றே யிணையிழந்தபாவிகளைச்
சத்துவத்தோடாதரித்துத் தன்னடிமைகொள்பவளைத்
தன்பேரிற்பத்தி தவறாதபாவிகளை
அன்போடுதற்காத் தரவணைக்குமம்மாளை
நம்பியேநாளும் நமக்கிவளே தஞ்சமென
அம்புவியிற்சிந்தித் தனவரதமுந்தொழுவோம்

## திருச்சபைப் புகழ்ச்சி

வாழிதிருச்சபையு மங்காதசத்தியமும்
ஆழிசூழ்ந்த வவனிதனிலேவாழி
சற்குருக்கண்மெய்ஞ்ஞான சாத்திரிகணற்சபையும்
பொற்பிறையும்வேதப் புரோகிதரெல்லாம்வாழி
வாலவிரத்தர் மடமாதர்கன்னியர்கள்
சாலத்துறவோர் தபசிகளுமேவாழி
பூசைசபைநிறைந்த பூபாலராயர்பல
தேசத்திலுள்ள திருச்சபையெல்லாம்வாழி
மெய்ச்சபையிலுள்ள விசுவாசிகள்யாரும்
இப்புவியிலிப்போது மெப்போதுமேவாழி
பஞ்சம்படைநோய்கள் பாருலகில்வாராமல்
நெஞ்சிற்கவலையற்று நீடூழிவாழ்ந்திருப்போம்

பேரின்பக் காதல் முற்றிற்று.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனிடம்
# நல்ல மரணம் தரும்படி பிரார்த்தித்தல்

**அந்தோனிக்குட்டி அண்ணாவியார் பாடல்**

இராகம் : நாதநாமக்கிரியை தாளம் : சாப்பு

நல்ல மரணந்தர வேண்டும் நீதி
வல்லபரனேயுன்றன் மனதன்புகூர்ந்து — நல்ல

1. வெல்லைமலையில் வருபவனே — அன்பர்
வேண்டும்பரமபிதா வேதாவின் சுதனே
வல்லநடுவில் வருபவனே — வந்து
மரணவேளையிலென்றன் மலக்கத்தீர்ப்பவனே — நல்ல

2. பெருவாரி படைபஞ்சம்போக்கி — உன்றன்
பெலத்தினாறென்றனைப் பேரின்பமாக்கி
வரும்பாவவினைகளைநீக்கி என்றன்
மரணவேளையிலுன்றன் மலர்விழிநோக்கி — நல்ல

3. சாவினால்வரும் பயன்தணியக் — கர்த்தர்
தருநன்மைதனைக்கண்டு சாவுக்குத்துணிய
நாவினால் யேசுவென்றணிய யேசு
நாதாவுன்பாதத்தை நான்கண்டுபணிய — நல்ல

4. அருளுநற்கருணையையூட்டி எனக்
கவஸ்தைப்பூசுதல் தந்துன்னருள்வழிகாட்டி
பரமசற்குருபாதங்காட்டி — என்றன்
பாவம்பொறுத்துமோட்ச பயணத்தைச்சூட்டி — நல்ல

5. மெழுகுதிரி யென்னருகெரியத் — தவ
மேதையரெனக்காக வேண்டுதல்புரிய
அழுதெந்த னிருகண்ணீர்சொரிய — உன்றன்
ஐந்துகாயமுமென்றனருங் கண்ணிற்றெரிய — நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம் யாழ்ப்பாணம். 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org